DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 130/2024
Deposition of Witness for : PW 3

| | |
|---|---|
| Name. | திரு. குமார் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 26.11.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் மதுரை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனாாக வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜி என்பவரைத் தெரியும். அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். 19.10.2020ம் தேதி மாலை 5.30 மணி அளவில் நானும், ராஜி என்பவரும் அட்சயா கல்லூரி அருகே காளான் வாங்குவதற்காக சென்றோம். அப்பொழுது என்ன பார்த்தோம் என்றால் அட்சயா கல்லூரி அருகே குப்பலாக நிறைய நபர்கபள் இருந்தார்கள். அந்த கும்பலில் எதிரிகள் இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. எதற்காக கூட்டமாக நிற்கிறார்கள்எ ன்று நான் கேட்கவில்லை. நானும், ராஜியும் அவ்வாறு செல்லும் பொழுது அ.சா. 1 மற்றும்

அ.சா.2 மரங்களை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்றாலும், அப்பொழுது எதிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்து கத்தியைக் காட்டி மிரட்டி கேமராவை பிடுங்கிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. பின்னர் ஒரு நாள் காவல் ஆய்வாளரிடம் எதிரிகளை அடையாளம் காட்ட இயலும் என்ற அவரது விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் உண்மை விவரங்கள் சொல்லி தற்பொழுது எதிரிகளுக்கு பயந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.